STC.No. 1473–2022
நாள் 11.03.2026.
P.W.1 – (அழகர் )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

புசாஆ.7 சேமிப்பு கணக்கு புத்தகத்தில் 2018ம் ஆண்டு வரைதான் பதிவுகள் உள்ளது என்றால் சரி. புசாஆ.8 கூட்டு சேமிப்பு கணக்கு புத்தகம் என்றால் சரி. அதில் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை மட்டும் பதிவுகள் உள்ளது என்றால் சரி. புசாஆ.9 வங்கி கணக்கு பட்டியல் 01.01.2020 முதல் 31.12.2020 வரைக்கானது என்றால் சரி. நான் எதிரிக்கு ரூ.25 லட்சம் 06.10.2021 அன்று கொடுத்ததாக என் வழக்கு என்றால் சரி. புசாஆ.9 கணக்கு பட்டியலில் 26.08.2020 அன்று ரூ.85,562/– Sweep Account எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 16.06.2020 அன்று அந்த கணக்கு பட்டியலில் ரூ.8,43,000/– வரவாகி உள்ளது என்றால் சரி. 03.10.2020 அன்று ராமராஜ் வீரராஜு என்பவருக்கு ரூ.1,35,000/– பணம் மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரி. புசாஆ.9 கணக்கு பட்டியலின் படி, 31.12.2020 அன்று Closing Balance ரூ.95.57 மட்டும் இருந்தது என்றால் சரி. அந்த தேதி வரை ரூ.24,07,803/– அந்த கணக்கில் பற்றாகியுள்ளது.

புசாஆ.9 கணக்கு பட்டியலில் நான் செலவிற்கு எடுத்த ATM தொகை அனைத்தும் சேர்ந்ததுதான் அந்த பற்று தொகை என்றால் சரி. புசாஆ.10 கணக்கு பட்டியல் எனக்கும் என் மனைவிக்கும் உண்டான கூட்டுக் கணக்கிற்கானது என்றால் சரி. புசாஆ.10 கணக்கு பட்டியலில் 03.08.2020 அன்று ராமராஜ் வீரராஜுக்கு ரூ.1 லட்சம் பணம் மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரி. 20.08.2020 அன்று ஒரு காசோலை மூலமாக ரூ.4,50,000/– பணம் பறிமாறுதல் செய்துள்ளேன் என்றால் சரி. தபால் நிலையத்தில் அந்த பணத்தை செலுத்தியுள்ளேன். 28.10.2020 அன்று ரூ.2 லட்சம் பணம் பறிமாறுதலாகி உள்ளது என்றால் சரி. புசாஆ.10 கணக்கு பட்டியலில் Closing Balance ரூ.37,044.77 என்றால் சரி. அந்த கணக்கு பட்டியலில் ரூ.16,00,938.50 பற்றாகியுள்ளது. நான் அந்த கணக்கில் பணத்தை ATM மூலமாக எடுத்துள்ளேன் என்றால் சிறிய சிறிய தொகையாக எடுத்துள்ளேன். 2020ம் ஆண்டிற்கு பிந்தைய கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இதுவே போதுமானது என்பதால் தாக்கல் செய்யவில்லை.

நான் அந்த புசாஆ.7 முதல் 10 வங்கி கணக்குகளில் இருந்து பணத்தை என் செலவிற்காக எடுத்துள்ளேன் என்றால் சிறிய தொகை எடுத்துள்ளேன், வங்கியில் இருந்து வட்டி பெற Sweep Account ஆக மாற்றியுள்ளேன் என்றாலும் சரி. அதே வங்கி கணக்கில்தான் அந்த பணம் இருப்பு இருக்கும். நான் எதிரிக்கு பென்சன் தொகையில் இருந்து பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன்

என்றால் சரியல்ல. நான் 2020ம் ஆண்டு முதல் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்யாததால் என் கையிருப்பில் போதிய பணம் இல்லை என தெரியவரும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/3/24

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.